# PROBLEMS FACED BY SPECIAL NEEDS STUDENTS IN CLASSROOM ACTIVITIES PAIRED WITH NORMAL STUDENTS


**[1]Nadarajah Rajeetha**

**Temporary Assistant Lecturer, Department of Education and Childcare, Eastern University of Sri Lanka.**

**rajeethanada@gmail.com**



**Abstract**

Education is regarded as a basic human right for all regardless of individual differences and a key ingredient for socio economic development. Special needs education is famous as inclusive Education. This Education system helps to develop the talents of differently abled children who have special needs. Special needs students are very important in the world. The special needs students who unable to learn through normal class activities. They cannot be engaged in teaching activities with normal students. The purpose of this study was to identify problems faced by special needs students in classroom activies with normal students. The objectives of the study are identify the special needs students, Causes of problems special needs students encounter in classroom activities paired with normal students, Problems faced by special needs students in classroom activities paired with normal students. The manmunai north division has been chosen for the research. Five schools from manmunai north division has been selected for sampling. The target populations for this study included junior secondary teachers, junior secondary special needs students, principals and parents. The sample size was 30 teachers, 100 students 20 parents and 5 principals. The main data collection tools for this study were questionnaires, observation, interview and documents . Data has been also collected thought written structured questionnaire from teachers, special needs students and parents. and interview from principals. Secondary data is collected from documents . This study applied both quantitative and qualitative approaches to process, analyze and interpret the data.



**Keywords** Special Needs Students, Classroom Activities, Manmunai North, Normal Students


### 1.1 ஆய்வின் அறிமுகம்

அனைவருக்கும் கல்வி என்ற சிந்தனை தற்காலத்தில் பிரபல்யமாகப் பேசப்படுகின்ற ஒன்றாகும். இதனடிப்படையில் கல்வியானது அனைவருக்கும் கிடைக்கப் பெற வேண்டியது அவசியமாகும். இதனைக் கருத்திற் கொண்டே இன்று அனேக பாடசாலைகளில் விசேட தேவையுடைய மாணவர்கள் சாதாரண மாணவர்களுடன் இணைந்து வகுப்பறைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படுகின்றார்கள். ஒவ்வொரு வகுப்பறைச் செயற்பாட்டின் நோக்கமும் மாணவர்களின் விருத்தியை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆனால் சாதாரண மாணவர்களுடன் விசேட தேவையுடைய மாணவர்கள் வகுப்பறைச் செயற்பாடுகளில் இணைக்கப்படும் பொழுது எவ்வாறு அவர்களது விருத்தி நிலை சாத்தியமாகும் என்பது கேள்விக் குறியாகும்.

வகுப்பறைகளில் விசேட தேவையுடைய மாணவர்களை ஏனைய சாதாரண மாணவர்கள் ஒதுக்கிப் பார்க்கின்ற நிலையையும் ஒதுக்கி வைக்கின்ற நிலையையும் காணக் கூடியதாக உள்ளது. வகுப்பறைச் செயற்பாடுகளில் சாதாரண மாணவர்களின் ஆற்றல்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் விசேட தேவையுடைய மாணவர்கள் இடர்படகின்றனர். ஆசிரியர்கள் சுாதாரண மாணவர்களுடன் விசேட தேவையுடைய மாணவர்களையும் இணைத்துக் கற்பிக்கின்ற போது பெரும்பாலும் விசேட தேவைையுடைய மாணவர்களை கவனத்தில் எடுக்காத போக்குக் காணப்படுகின்றது. இச்செயற்பாடு விசேட தேவையுடைய மாணவர்களிடத்தில் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்துகின்றது. வகுப்பறையில் ஆசிரியர் விசேட தேவையுடைய மாணவர்களுக்கென சில விசேட கருவிகளைப் பயன்படுத்திக் கற்பித்தலை மேற்கொள்ளாத நிலைமை காணப்படுகின்றது. இதனால் கற்றல் செயற்பாட்டினை சரியாக மேற்கொள்ள முடியாமல் இடர்படுவதுடன் இம்மாணவர்களின் அடைவுமட்டம் வீழ்ச்சியடைகின்றது. இவ்வாய்வின் மூலம் விசேட தேவையுடைய மாணவர்களை இனங்காண்பதோடு சாதாரண

மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாட்டில் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர் என்பதை மதிப்பிடுவதாக இவ்வாய்வின் அறிமுகமானது அமையப் பெற்றுள்ளது.

### 1.2 ஆய்வின் பின்னணி

விசேட தேவையுடைய மாணவர்கள் இன்று அதிகமான பாடசாலைகளில் கவனம் செலுத்தப்படாதவர்களாகக் காணப்படுகின்றனர். பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் சாதாரண மாணவர்களின் செயற்பாடுகள் விசேட தேவையுடைய மாணவர்கள் மீது அதிக கவனத்தைச் செலுத்துவதாகக் காணப்படவில்லை. சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாட்டில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு ஏற்றாற் போல் வகுப்பறைச் செயற்பாடுகளைப் பின்பற்றாமை, சரியான வகுப்பறை முகாமைத்துவம் இன்மை, கற்கும் சூழல் சிறப்பாக அமைந்து காணப்படாமை என்பன விசேட தேவையுடைய மாணவர்களிடத்தில் இடர்பாடுகளை ஏற்படுத்துவதில் அடிப்படையாக உள்ளன.

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கலைத்திட்டம் காணப்படாமை, கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்தாமை என்பன காரணமாக சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாடுகளில் இம்மாணவர்கள் இடர்படுகின்றனர்.

விசேட தேவையுடைய மாணவர்களிடத்தில் காணப்படும் தாழ்வு மனப்பான்மை அடுத்த பின்னணியாகக் காணப்படுகின்றது. வகுப்பறைச் செயற்பாடுகளில் விசேட தேவையுடைய மாணவர்கள் தங்களிடத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளினால் வகுப்பறைச் செயற்பாடுகளில் ஒதுக்கி வைக்கப்படுகின்றார்கள். இந்நிலைமையினால் இம்மாணவர்களிடத்தில் தாழ்வு மனப்பான்மை ஏற்படுகின்றது. இதனால் விசேட தேவையுடைய மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் பின்தங்குவதுடன் இம்மாணவர்களின் அடைவுமட்டமும் வீழ்ச்சியடைகின்றது.

### 1.3 ஆய்வுப் பிரச்சினை

விசேட தேவையுடைய மாணவர்கள் சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாடுகளில் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். வகுப்பறையில் மேற்கொள்ளப்படும் கற்றல் செயற்பாடுகள், குழுச் செயற்பாடுகள், இணைப்பாடவிதான செயற்பாடுகள் என அனைத்து செயற்பாடுகளிலும் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

ஆசிரியர்கள் விசேட தேவையுடைய மாணவர்களை சாதாரண மாணவர்களுடன் இணைத்து கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது விசேட தேவையுடைய மாணவர்கள் அதிகம் கவனிக்கப்படாத நிலை காணப்படுகின்றது. இவ்வாறான ஆசிரியர்களது செயற்பாடு விசேட தேவையுடைய மாணவர்களிடத்து பாதிப்பினை ஏற்படுத்துவதாக உள்ளது. மேலும் சாதாரண மாணவர்களின் செயற்பாடுகளும் விசேட தேவையுடைய மாணவர்கள் மத்தியில் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன.

சுாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாடுகளில் விசேட தேவையுடைய மாணவர்கள் ஒதுக்கி வைக்கப்படுகின்றமையினால் இம்மாணவர்களிடத்தில் தாழ்வு மனப்பான்மை ஏற்படுகின்றது. வகுப்பறையில் எப்போதும் பின்வரிசையில் இருப்பவர்களாகவும் தங்களால் இயலாது என்ற மனப்பான்மையோடு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபாடு காட்டாது இருக்கின்றனர். மேலும் கருத்துக்களினை சுதந்திரமாக வெளிப்படுத்த முடியாமல் சிரமப்படுகின்றார்கள். சாதாரண பிள்ளைகளால் விசேட தேவையுடைய மாணவர்கள் ஒதுக்கப்படுவதனால் உடல், உள ரீதியான பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

வகுப்பறைச் செயற்பாடுகளில் ஆசிரியர்களால் விசேட தேவையுடைய மாணவர்களுக்கென கருவிகள் பயன்படுத்தப்படாமை, பரிகாரக் கற்பித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாமை என்பனவற்றால் கற்றல் செயற்பாடுகளை சிறப்பாக தொடர முடியாமல் பின்தங்குகின்றனர். சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாடுகளில் இம்மாணவர்கள் ஒதுக்கி வைக்கப்படுவதனால் கற்றலை சிறப்பாக மேற்கொள்ள முடியாமல் போகின்றது. இதனால் இம்மாணவர்களின் அடைவுமட்டம் வீழ்ச்சியடைகின்றது.

### 1.4 ஆய்விற்கான நியாயங்கள்

விசேட தேவையுடைய மாணவர்கள் வகுப்பறைச் செயற்பாடுகளில் சாதாரண மாணவர்களுடன் இணையும் பொழுது ஏற்படும் சிக்கல்களை அறிந்து கொள்வதற்கும் அதற்கான தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்கும் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சிறப்பான கற்பித்தல் முறைகள், வகுப்பறை செயற்பாட்டு நுட்பங்கள், கற்பித்தல் கருவிகள் போன்றன பற்றி அறிந்து கொள்வதற்கும் அவற்றின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வதற்கும் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

விசேட தேவையுடைய மாணவர்களுக்கு சிறப்பான முறையில் மேற்கொள்ளப்படும் கற்பித்தல் செயற்பாடுகளை அறிந்து கொள்வதற்கும் அவற்றில் எத்தகைய மாற்றங்களை முன்வைத்து சிறப்பானதொரு செயற்பாடாக மாற்றியமைக்கலாம் என்பதனை அறிவதற்கும் இவ்வாய்வு அவசியமாகின்றது.

விசேட தேவையுடைய மாணவர்கள் வகுப்பறைச் செயற்பாட்டின் இறுதியில் அடையும் அடைவுமட்டத்தின் தார்ப்பரியத்தை அறிந்து கொள்ளவும் அதனடிப்படையில் அதில் மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டுமாயின் அதனை செயற்படுத்தவும் இவ்வாய்வு அவசியமாகின்றது.

வகுப்பறைச் செயற்பாட்டின் போது விசேட தேவையுடைய மாணவர்களினது ஆர்வமற்ற தன்மைகளை அறிந்து அதனை அவர்கள் மேற்கொள்வதற்கான காரணங்களை அறிதலும் அத்துடன் அதனை நிவர்த்தி செய்வதற்கு எத்தகைய செயற்பாடுகளை அல்லது நடவடிக்கைகளை முன்வைக்க முடியும் என்பதை அறிந்து கொள்ளவும் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

விசேட தேவையுடைய மாணவர்களிடத்தில் காணப்படும் தாழ்வு மனப்பான்மையை நீக்கி அவர்களிடத்தில் சிறந்த மனப்பாங்கை ஏற்படுத்துவதற்கும் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. விசேட தேவையுடைய மாணவர்களை வகுப்பறைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் பொழுது வகுப்பறை முகாமைத்துவம், சூழல் என்பன எவ்வாறு காணப்படுகின்றது என்பதனை அறிந்து கொள்ளவும் அதற்கு ஏற்றாற் போல் வகுப்பறையை மாற்றிக் கொள்ளவும் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாடுகளில் விசேட தேவையுடைய மாணவர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குவதற்கான காரணங்களைக் கண்டறிந்து அதற்கான தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்கும் இவ்வாய்வு அவசியமானதாகும்.

### 1.5 ஆய்வின் நோக்கம்

**பொது நோக்கம்**

சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாடுகளில் விசேட தேவையுடைய மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கண்டறிதல்.

**சிறப்பு நோக்கங்கள்**

1. வகுப்பறையில் விசேட தேவையுடைய மாணவர்களை இனங்காணல்.
2. சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாட்டில் விசேட தேவையுடைய மாணவர்களின் பிரச்சினைக்கான காரணங்களைக் கண்டறிதல்.
3. சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாட்டில் விசேட தேவையுடைய மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கண்டறிதல்.
4. சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாட்டில் விசேட தேவையுடைய மாணவர்களின் பிரச்சினைகளை நீக்குவதற்கான வழிவகைகளை முன்வைத்தல்.

### 2.0 இலக்கிய மீளாய்வு

சுாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாட்டில் விசேட தேவையுடைய மாணவர்கள் ஈடுபடுகின்றார்கள். இங்கு சமத்துவமான வாய்ப்பு என்ற அடிப்படைக் கருத்து வெளிப்படுத்தப்படுகின்றது. சரியான கற்றல் செயற்பாடுகள், சாதனைகள், சமூகத் தொடர்புகள் என்பவற்றை விருத்தி செய்வதாகவும் தனிப்பட்ட திட்டமிடலுடன் நடைமுறைப்படுத்தப்படுவதாக காணப்படுகின்றது. (Stepxens and blackhurt, 2005)

சாதாரண மாணவர்களுடன் இணைந்த விசேட தேவைகளுடைய மாணவர்களது கற்றல் செயற்பாடுகளின் வெற்றி அதில் பங்கு கொள்வோரின் மனப்பாங்கில் தங்கியுள்ளது. ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் போன்றவர்களது மனப்பாங்குகள் சாதாரண மாணவர்களுடன் இணைந்த விசேட தேவையுடைய மாணவர்களது கற்றல் செயற்பாடுகளுக்கு அவசியமான காரணியாகும். (Helphtiaka, 2005)

Anderson, klassen என்பவர்கள் 2006 இல் மேற்கொண்ட ஆய்வில் விசேட தேவையுடைய மாணவர்களது வகுப்பறைச் செயற்பாடு தொடர்பான ஆய்வில் விசேட தேவையுடைய மாணவர்கள் சாதாரண மாணவர்களுடன்

இணைந்த வகுப்பறைச் செயற்பாட்டினை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு அவசியமான வளங்கள் தேவை என்கின்றனர்.

### 3.0 ஆய்வு முறையியல்

மட்டக்களப்பு வலயத்தில் மண்முனை வடக்கு கோட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டதாக ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. எந்தவொரு ஆய்வுக்கும் ஆய்வு முறையியலும் ஆய்வு நுட்பவியலும் அடிப்படையாகும். ஆய்வு முறையியல் என்ற விடயத்தினுள் எவ்வகையான ஆய்வு, என்ன முறையில் பயன்படுத்தப்படுகின்றது, ஆய்வு மேற்கொள்ளப்படும் மாதிரி எடுப்பு, தரவு சேகரித்தல் முறைகள், எவ்வாறான பகுப்பாய்வு முறைகள் என்பன உள்ளடக்கப்படுகின்றன.

ஆய்வு முறைமை சிறப்பானதாகக் காணப்படும் போதே தீர்வுகள் நம்பகத் தன்மையுடையதாகக் காணப்படும். இந்த ஆய்வு முறையியலில் ஆய்வினை மேற்கொள்ள எவ்வாறு தகவல்கள் பெறப்பட்டன, மாதிரித் தெரிவுகள் எவ்வாறு இடம்பெற்றுள்ளன, தகவல் சேகரிக்க எவ்வாறான கருவிகள் பயன்படுத்தப்பட்டன, ஆய்வின் வடிவம், ஆய்வு செய்யப்பட்ட இடங்கள், ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்கள், தரவுப் பகுப்பாய்வு முறைகள் என்பன தொடர்பான விடயங்கள் ஆய்வு முறையியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வில் அளவு ரீதியான முறையியல்கள், பண்பு ரீதியான முறையியல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எண் ரீதியான முறையியலில் எண்கள், புள்ளவிபரங்கள், அட்டவணைகள், வரைபுகள், மாணவர் தொகை, விகிதாசாரங்கள் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன் மூலமாக புறவயத்தன்மையாக ஆய்வு கொண்டு செல்லப்படுகின்றது.

ஆய்வு தொடர்பான கோட்பாட்டு ரீதியான உறுதிப்படுத்தலுடன் தொடர்பு கொண்டதாக பண்பு ரீதியான முறையில் காணப்படுகின்றது. இங்கு சம்பந்தப்பட்ட பாடசாலைகளிலுள்ள அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் என்பவர்களுடனான நேர்காணல், வினாக்கொத்து, போன்றன மூலமாக பெறப்பட்ட தகவல்கள், அபிப்பிராயங்கள், எண்ணங்கள், வெளிப்பாடுகள் போன்ற அகவயமான உணர்வுகளும் ஆய்வில் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

### 3.1 மாதிரித் தெரிவு

இங்கு ஆய்வாளனால் பாடசாலைகளையும் பாடசாலை மனித வளங்களையும் அடிப்படையாகக் கொண்டு மாதிரித் தெரிவு இடம்பெறுகிறது. மாதிரித் தெரிவானது பொருத்தமானதாக அமைய வேண்டும் என்பதற்கு இணங்க இவ் ஆய்விற்கு வசதி மாதிரியும் நோக்க மாதிரியும் தரவு சேகரிப்பிற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனடிப்படையில் மண்முனை வடக்குக் கோட்டத்தில் 1AB பாடசாலைகள் எட்டும், 1C பாடசாலைகள் நான்கும், வகை II பாடசாலைகள் பதினேழும், வகை III பாடசாலைகள் பத்தும் என மொத்தமாக 39 பாடசாலைகள் காணப்படுகின்றன. இவற்றுள் நான்கு வகை II பாடசாலைகளும் ஒரு 1C பாடசாலையும் அடங்கலாக மொத்தமாக ஐந்து பாடசாலைகள் தூரம், போக்குவரத்துப் பிரச்சினை என்பவற்றைக் கருத்திற் கொண்டு வசதி மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஐந்து பாடசாலைகளில் இருந்தும் கனிஷ்ட இடைநிலைப் பிரிவில் கல்வி கற்கும் விசேட தேவையுடைய மாணவர்கள் ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் 20 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு மொத்தமாக 100 மாணவர்கள் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆசிரியர்கள் 5 பாடசாலைகளிலிருந்தும் 3:1 எனும் விகிதத்தின் அடிப்படையில் 30 ஆசிரியர்கள் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆய்வின் நோக்கம் கருதி 5 பாடசாலைகளிலிருந்தும் அதிபர்களின் மூலம் தகவல்கள் பெற்றுக் கொள்ளும் நோக்கில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலையின் அதிபர்கள் ஒவ்வொருவரும் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பெற்றோர்களின் மாதிரித் தெரிவானது ஆய்வு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களின் பெற்றோர்கள் 5:1 எனும் விகிதத்தில் 20 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### 3.2 தரவுப் பகுப்பாய்வும் வியாக்கியானமும்

ஆய்வுக்கான தரவுகளைச் சேகரித்த பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடு தரவுப் பகுப்பாய்வு ஆகும். இத் தரவுப் பகுப்பாய்வின் மூலமே பிரச்சினைகள் கண்டறியப்படுகின்றன. இத் தரவுப் பகுப்பாய்வு சிறப்பாக அமைய சேகரிக்கப்படும் தகவல்கள் முழுமையானதாக அமைய வேண்டும். அத்துடன் ஆய்வு நோக்கத்தை மையமாகக் கொண்டதாகவும் சேகரிக்கப்படும் தரவுகள் அமைய வேண்டும். இவ்வாறாக அமையும் போது தான் சிறப்பான முடிவுகளைப் பெறலாம். இத் தரவுப் பகுப்பாய்வானது பல்வேறு படிமுறைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

வினாக்கொத்தில் உள்ள வினாக்களுக்கான தரவுகள் அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் இவ்வாய்வின் பகுப்பாய்வு முறையானது முன்னும் பின்னுமாக பல செயற்பாடுகளைக் கொண்டமைந்துள்ளது. தரவு வடிவங்களைத் தெரிவு செய்து தரவுகளைச் சேகரித்த பின்னர் அத்தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு குறித்துக் காட்டப்பட்டுள்ளது. தரவுப் பகுப்பாய்வானது விசேட நோக்கங்களிற்கு ஏற்ப


உருவாக்கப்பட்ட ஆய்வு வினாக்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஆய்வுக் கருவிகளின் மூலம் பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாக கொண்டமைகின்றது.

ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரிடமிருந்து வினாக்கொத்தின் மூலம் திரட்டப்பட்ட தரவுகளும் அதிபரிடமிருந்து நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவுகளும் ஆவணச் சான்றுகளை பார்வையிடுவதன் மூலமாகப் பெறப்பட்ட தரவுகளும் அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டு எண்சார் தகவல்களாக மாற்றப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணையாக்கம், சலாகை வரைபுகள் ஊடாக புள்ளிவிபரங்களின் வாயிலாக விளக்கப்படுகின்றது. பகுப்பாய்வுக்காக Microsoft Excel முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

**4.0 தரவுப் பகுப்பாய்வு முடிவுகள்**

**4.1 விசேட தேவையுடைய மாணவர்களை இனங்காணல்.**

ஆய்விற்காகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் விசேட தேவையுடைய மாணவர்கள் ஓரளவு காணப்படுகின்றனர். இதனை பின்வரும் உருவின் ஊடாக அறியலாம்.





**உரு.1 விசேட தேவையுடைய மாணவர்கள் காணப்படுதல்**

பாடசாலைகளில் மெல்லக் கற்கும் மாணவர்களும் மொழிக் குறைபாடு உடையவர்களும் காணப்படுவதோடு ஓரளவு கேட்டல் குறைபாடு உடையோரும் ஓரளவு பார்வைக் குறைபாடு உடையோரும் ஓரளவாகவே காணப்படுகின்றனர். இதனை பின்வரும் அட்டவணையின் ஊடாக அறியலாம்.

**அட்டவணை 1: பாடசாலைகளில் விசேட தேவையுடையோர்**

| **விசேட தேவையுடையோர்** | **அதிபர்** | | | **ஆசிரியர்** | | |
|---|---|---|---|---|---|---|
| | **ஆம்** | **இல்லை** | **ஓரளவு** | **ஆம்** | **இல்லை** | **ஓரளவு** |
| மெல்லக் கற்போர் | 100 | 0 | 0 | 100 | 0 | 0 |
| மொழிக் குறைபாடு | 40 | 30 | 30 | 60 | 30 | 10 |
| ஓரளவு பார்வைக் குறைபாடு | 0 | 0 | 100 | 0 | 0 | 100 |
| ஓரளவு கேட்டல் குறைபாடு | 0 | 0 | 100 | 0 | 0 | 100 |

**4.2 சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாட்டில் விசேட தேவையுடைய மாணவர்களின் பிரச்சினைக்கான காரணங்கள்**





**உரு.2 பாடசாலைகளில் போதியளவு வசதிகள் காணப்படுதல்**

சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாட்டை சிறப்பான முறையில் செயற்படுத்த போதியளவு வசதிகள் பாடசாலையில் காணப்படுதல் தொடர்பில் வினவப்பட்ட வினாவிற்கு அதிபர்களில் 60 சதவீதமானோர் ஆம் எனவும் 40 சதவீதமானோர் இல்லை எனவும் பதிலளித்தனர். ஆசிரியர்களில் 52 சதவீதமான ஆசிரியர்கள் ஆம் எனவும் 48 சதவீதமான ஆசிரியர்கள் இல்லை எனவும் பதிலளித்தனர். விசேட தேவையுடைய மாணவர்களில் 30 சதவீதமானோர் ஆம் என்ற பதிலையும் 70 சதவீதமானோர் இல்லை என்ற பதிலையும் வழங்கினர். மேற்படி தரவுகளின் படி சாதாரண மாணவர்களையும் விசேட தேவையுடைய மாணவர்களும் இணைந்த வகுப்பறைச் செயற்பாட்டை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு போதியளவு வசதிகள் பாடசாலைகளில் காணப்படவில்லை.

**அட்டவணை 2 : சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செற்பாடுகளில் விசேட தேவையுடைய மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான காரணங்கள்**


| **காரணங்கள்** | **பதில்கள்** | | |
|---|---|---|---|
| | **அதிபர்** | **ஆசிரியர்கள்** | **விசேட தேவையடைய மாணவர்கள்** |
| குடும்பச் சூழல் | 60% | 70% | 90% |
| வகுப்பறைச் சூழல் | 60% | 40% | 80% |
| மாணவர்களுக்கேற்ற வகுப்பறைச் செயற்பாடுகளின்மை | 40% | 20% | 90% |
| தாழ்வுச் சிக்கல் | 20% | 50% | 60% |
| கலைத்திட்ட குறைபாடு | 40% | 40% | 40% |
| உடலியற் குறைபாடுகள் | 40% | 6% | 80% |
| கற்றல் உபகரணங்களின் பயன்பாடின்மை | 60% | 30% | 60% |
| வளப்பற்றாக்குறை | 60% | 20% | 70% |
| சமூகக் காரணிகள | 60% | 40% | - |

**4.3 சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாட்டில் விசேட தேவையுடைய மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்**




**உரு. 3 சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாட்டில் விசேட தேவையுடைய மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்.**

சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாட்டில் விசேட தேவையுடைய மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் வினவப்பட்ட வினாவிற்கு அதிபர்களில் 100 சதவீதம் ஆம் என பதிலளித்தனர். ஆசிரியர்களில் 80 சதவீதமான ஆசிரியர்கள் ஆம் எனவும் 20 சதவீதமான ஆசிரியர்கள் இல்லை எனவும் பதிலளித்தனர். விசேட தேவையுடைய மாணவர்களில் 92 சதவீதமானோர் ஆம் என்ற பதிலையும் 8 சதவீதமானோர் இல்லை என்ற பதிலையும் வழங்கினர். பெற்றோர்களில் 80 சதவீதமானோர் ஆம் என்ற பதிலையும் 20 சதவீதமானோர் இல்லை என்ற பதிலையும் வழங்கினர்.





**உரு.4 விசேட தேவையுடைய மாணவர்களுக்கு வகுப்பறைச் செயற்பாடுகளில் முன்னுரிமை வழங்கப்படுதல்**

விசேட தேவையுடைய மாணவர்களது வகுப்பறைச் செயற்பாட்டில் முன்னுரிமை வழங்கப்படுதல் தொடர்பில் வினவப்பட்ட வினாவிற்கு 20 சதவீதமான விசேட தேவையுடைய மாணவர்கள் திருப்தி என்ற பதிலையும் 60 சதவீதமானோர் திருப்தியின்மை என்ற பதிலையும் 20 சதவீதமானோர் ஓரளவு என்ற பதிலையும் தெரிவித்தனர்.

தரவுகளின் படி வகுப்பறைச் செயற்பாடுகளில் விசேட தேவையுடைய மாணவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படாமையை அறிய முடிகின்றது.

**4.4 சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாட்டில் விசேட தேவையுடைய மாணவர்களின் பிரச்சினைகளை நீக்குவதற்கான வழிவகைகளைக் கண்டறிதல்**




**உரு. 5 விசேட தேவைகளுடைய மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நீக்குவதற்கான உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுதல்.**

வகுப்பறைச் செயற்பாடுகளில் விசேட தேவையுடைய மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நீக்குவதற்கான உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது தொடர்பில் வினவிய வினாவிற்கு அதிபர்களில் 100 சதவீதம் ஆம் என பதிலளித்தனர். ஆசிரியர்களில் 60 சதவீதமான ஆசிரியர்கள் ஆம் எனவும் 40 சதவீதமான ஆசிரியர்கள் இல்லை எனவும் பதிலளித்தனர். விசேட தேவையுடைய மாணவர்களில் 24 சதவீதமானோர் ஆம் என்ற பதிலையும் 76 சதவீதமானோர் இல்லை என்ற பதிலையும் வழங்கினர். பெற்றோர்களில் 30 சதவீதமானோர் ஆம் என்ற பதிலையும் 70 சதவீதமானோர் இல்லை என்ற பதிலையும் வழங்கினர்.

## 5.0 தீர்வுகளும் ஆலோசனைகளும்

### 5.1 விசேட தேவையுடைய மாணவர்களை இனங்காணல்

வகுப்பறைகளில் விசேட தேவையுடைய மாணவர்கள் இனங்காணப்பட வேண்டும். ஆசிரியர் விசேட தேவையுடைய மாணவர்களை கவனத்தில் எடுக்க வேண்டும். விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலுக்கு உதவ வேண்டும். வகுப்பறைச் சூழலை விசேட தேவையுடைய மாணவர்களுக்கு ஏற்றாற் போன்று ஒழுங்குபடுத்திக் கொடுக்க வேண்டும். கற்பித்தல் செயற்பாட்டில் விசேட தேவையுடைய மாணவர்களையும் கருத்திற் கொள்ள வேண்டும். பாட, இணைப்பாடவிதான செயற்பாடுகளில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கி அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அவர்களிடம் காணப்படுகின்ற தனித்திறமைகளை இனங்கண்டு அவற்றை வெளிக்கொணர்வதற்கு சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

### 5.2 சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாட்டில் விசேட தேவையுடைய மாணவர்களின் பிரச்சினைக்கான காரணங்களைக் கண்டறிதல்.

பெற்றோர் விசேட தேவையுடைய மாணவர்களில் அன்பும் அக்கறையும் காட்ட வேண்டும். இம்மாணவர்களின் கற்றலில் அக்கறை செலுத்த வேண்டும். வகுப்பறையில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கேற்ற வகையில் ஆசன வசதிகள் ஒழுங்குபடுத்திக் கொடுக்கப்பட வேண்டும். கலைத்திட்டத்தினை தயாரிக்கும் போது விசேட தேவையுடைய மாணவர்களையும் கருத்திற் கொண்டு தயாரிக்க வேண்டும். விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கற்பித்தல் உபகரணப் பயன்பாட்டை வகுப்பறைகளில் மேற்கொள்ள வேண்டும். பிரதேசத்தில் உள்ள மன்றங்கள், கழகங்கள், சமூக அமைப்புக்கள் என்பன விசேட தேவையுடையோரின் கல்விக்கு உதவுதல் வேண்டும். வசதி படைத்தவர்கள் வறிய நிலையில் உள்ளவர்களுக்கு உதவிகளை வழங்கி ஊக்குவித்தல் வேண்டும்.

### 5.3 சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாட்டில் விசேட தேவையுடைய மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கண்டறிதல்.

வகுப்பறைச் செயற்பாட்டில் மாணவர்களிடையே முரண்பாடுகள் ஏற்படாதவாறு குழுச் செயற்பாடுகள், இணைப்பாடவிதான செயற்பாடுகள் அனைத்திலும் விசேட தேவையுடைய மாணவர்களை ஈடுபடுத்த வேண்டும். சாதாரண மாணவர்களிடத்தில் விசேட தேவையுடைய மாணவர்கள் தொடர்பான புரிந்துணர்வினை ஆசிரியர்கள் ஏற்படுத்த வேண்டும். ஆசிரியர் சகல வகுப்பறைச் செயற்பாடுகளிலும் விசேட தேவையுடைய மாணவர்களை ஊக்கப்படுத்தி முன்னுரிமை வழங்க வேண்டும். விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியர்கள் அக்கறை செலுத்த வேண்டும். விசேட தேவையுடைய மாணவர்கள் பயன்பெறும் வகையில் நவீன கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்தக் கூடிய வகையில் அனுபவங்களை ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டும். கல்வித் திணைக்களங்கள் உரிய நேரத்திற்கு வளங்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

**5.4 சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாட்டில் விசேட தேவையுடைய மாணவர்களின் பிரச்சினைகளை நீக்குவதற்கான வழிவகைகளைக் கண்டறிதல்**

கல்வி என்பது அனைவருக்கும் சமத்துவமானது. இதனை நோக்காகக் கொண்டு விசேட தேவையுடைய மாணவர்களையும் பாடசாலையினுள் உள்வாங்க வேண்டும். விசேட தேவையுடைய மாணவர்களின் குறைபாடுகளை ஆசிரியர் இனங்காண வேண்டும். அதற்கேற்ற வகையில் வகுப்பறைச் செயற்பாடுகளின் போது கற்பித்தல் துணைச்சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும். விசேட தேவையுடைய மாணவர்களுக்கு மாலை நேர வகுப்புக்களை ஒழுங்கு செய்து கற்பிக்க வேண்டும். கலைத்திட்டத்தினை தயாரிக்கும் போது விசேட தேவையுடைய மாணவர்களையும் கருத்திற் கொண்டு தயாரிக்க வேண்டும். விசேட தேவையுடைய மாணவர்களின் அடைவுமட்டத்தினை அதிகரிக்கும் வகையில் பரிகாரக் கற்பித்தல்களை மேற்கொள்ள வேண்டும். விசேட கல்வியில் தேர்ச்சி பெற்ற வளவாளர்களை அழைத்துக் கற்பிக்க வேண்டும். ஆசிரியர்கள் பரிகார நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கு தேவையான உதவிகளை பாடசாலைச் சமூகம் பெற்றுக் கொடுக்க வேண்டும். கல்வி பற்றிய விழிப்புணர்வை மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

**Acknowledgement**

My deepest gratitude goes to the Loard. This study would not have been possible without the love, prayers, support, cooperation and encouragement of my dear parents. To the Teachers, Principals, Special needs students and parents in manmunai north division be blessed for the willingness to offer information during the data collection process. I wish to extend my sincere gratitude to lecturers.

**உசாத்துணைகள்**

அருள்மொழி, செ. 2008. *கல்வி ஆய்வு முறைகள்*, எவகிறின் அச்சகம், மட்டக்களப்பு.
இலங்கை திறந்த பல்கலைக்கழகம், (2007). *விசேட நிலைமைகள் மற்றும் கற்றல் தேவைக்கான அறிமுகம்,* நாவல், நுகேகொட.
இலங்கை திறந்த பல்கலைக்கழகம், (2010). *விசேட தேவைகள்சார் கல்விக்கான பல்துறை அணுகுமுறைகள்,* நாவல், நுகேகொட.
Chintamanikar. (2004).*Exceptional Children,* Sterling Publishers pvt, New Delhi.
Dash. M, (2000). *Education of exceptional children, Atlantic publishers and distributers*, B-2, vishal enclave, opp.Rajouri, Garden, New Delhi-27
Panda K .C (2007). *Education of exceptional children,* Vikash Publishing house pvt 576, Masjid road, Jangpura, New Delhi- 110014